தினத் தந்தி

19-1-2014 இதழுடன் இணைப்பு

# குடும்பமலர்



## இசையும் நடனமும்!

Scanned by CamScanner

# சங்கீதம் சகலருக்கும் சந்தோஷம்!



நடன தோற்றத்தில் வித்யா பவானி

**"நடனமும் பாட்டும் இன்னமும் கூட அதை முழுசாய் தெரிந்து கொண்டவர்களின் எல்லைக்குள்ளேயே இருக்கிறது. கலையை ரசிக்கத் தெரிந்த பாமரனுக்கும் அது எளிமைப் படுத்தப்பட வேண்டும்" என்கிறார், வித்யா பவானி சுரேஷ்.**

இவர் எம்.ஏ.யில் நாட்டுப்புறவியலை பாடமாக எடுத்து தேர்ந்தவர். அதோடு பரத நாட்டியக் கலைஞர். இசை வல்லுனர் என்ற அடையாளங்களும் இவரை கலைஞர்கள் வரிசையில் முன்னிறுத்துகிறது.

இந்த ஆண்டும் வழக்கம்போல் டிசம்பர் சீசனில் இசைக்கச்சேரிகளுக்கு பஞ்சமில்லை. கர்நாடக இசை அரங்கமும் சவால் ராகங்களை சால்வை போட்டு வரவேற்றன. ஆனாலும் வழக்கம்போல இந்த ஆண்டும் இந்த துறையில் தேர்ந்த ஞானம் பெற்றவர்களே அரங்குகளை நிறைந்தனர். வழக்கம்போல 'நடனம் பிடிக்கும். பாட்டு உயிர்' என்ற சிலாகிக்கிற சராசரி ரசிகன் இந்த ஆண்டும் எட்டத்திலேயே இருந்து போனான்.

மேடையில் பாடகர் தன்னை மறந்து பாடிக்கொண்டிருக்கிறார். இசை ரசிகர்களும் அதற்கேற்ப தாளம் போட்டு பாடலை ரசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். 'இசை தெரியும். ஆனால் அது என்ன ராகத்தில் அமைந்தது என்று தெரியாது' என்கிற நம் சராசரி ரசிகன் இந்த அரங்கினுள் அமர்ந்து ராகங்கள் புரிந்து ரசித்தால் எத்தனை புளகாங்கிதமடைவான்! அடவு, வர்ணம் என்று சலங்கை ஒலிக்க ஆடும் பரத நாட்டிய அரங்கிலும் இதே நிலை தான். நீச்சல் தெரியாதவன் கடற்கரையிலேயே அமர்ந்தபடி நீந்துபவர்களை ஏக்கத்துடன் பார்க்கிற மாதிரியான இந்த கலைநிலை இன்னும் தொடர்வது சரி தானா?

இந்த கேள்வியைத்தான் நடன–இசைக்கலைஞர் வித்யா பவானி சுரேஷ் இப்போது கையில் எடுத்திருக்கிறார்.

விழா மேடைகளில் கலைஞர்களின் ரசனை உயர்ந்திருக்கிற அளவுக்கு பாமர ரசிகனின் இசை ரசனைத் திறன் வளரவில்லை. அவனும் இசை புரிந்து, நடனம் தெரிந்து ரசித்தால் மேல்தட்டு மக்களுக்கே என்றிருக்கும் இந்தக் கலைகள் பாமரனையும் பற்றிக் கொண்டு விடுமே.

இசை, நடனம் பற்றி மேலோட்டமாக மட்டுமே அறிந்து வைத்திருக்கும் ரசிகன் இதில் அடுத்தகட்டம் வர என்ன செய்ய வேண்டும்?

**நம் கேள்விக்கு வித்யா பவானி சுரேஷ் பதில் சொன்னார்:**



குடும்பத்துடன்...

Scanned by CamScanner

"ராகத்தை தெரிந்து கொண்டு தான் பாடலை ரசிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இசை மனதுக்குள் ஊடுருவி விட்டாலே அதை ரசிக்கிற ஆழுதுக்குள் இசை தெரிந்த தெரியாத அத்தனை பேருமே வந்து விடுவார்கள். அதேநேரம் பாட்டு கேட்க அரங்கம் வந்திருக்கும் அத்தனை பேரும் இசை மேதைகள் என்று எண்ணி விடாமல், என்ன ராகம் என்ன தாளம் என்று மேடையில் அறிவிக்கலாம். அவர்களுக்கு நல்ல இசை எந்த ராகத்தில் இருக்கிறது என்பது தெரிய வேண்டும். நல்ல மெலடி கேட்க விரும்புகிறவர்கள் பாட்டை கேட்கும் முன்பதாகவே அது எந்த ராகத்தில் அமைந்தது என்று தெரிந்தால் இன்னும் பாட்டை உள்வாங்கி ரசிப்பார்கள். நாட்பட நாட்பட இது இந்த ராகம் என்று அவர்களாகவே தெரிந்து கொண்டு பாட்டை இன்னும் ஆழமாக ரசிப்பார்கள்.



தமிழக கவர்னருடன் வித்யா பவானி – சுரேஷ் தம்பதிகள்

இதற்காகவே ஒவ்வொரு ரசிகரும் இசையிலும் நடனத்திலும் தங்கள் ரசனையை அதிகப்படுத்திக் கொள்ளும் விதத்தில் 50 கேள்விகளை கொடுத்து அதற்கான விளக்கங்களையும் தந்திருக்கிறோம். கூடியாட்டம், ஒடிசி, பரதம் என ஒவ்வொரு நடனத்திலும் அதுதொடர்பான ஆய்வைத் திரட்டி தந்து, ரசிகர்களின் கேள்வி ஞானத்தையும் பெருமைப் படுத்தியிருக்கிறோம்.

1999–ம் ஆண்டில் லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் சார்பில் மேடையேறியபோதே இந்த என் சிந்தனையை விதைக்கத் தொடங்கி விட்டேன். பரத நாட்டியம் பார்க்கும் பாமர ரசிகனுக்கு எந்தெந்த விதமான சந்தேகங்கள் வரும்? என்று நானே கேள்வி எழுப்பி அதற்கு விளக்கமும் சொன்னேன். இதை பார்த்த என் கணவர், இதையே நாம் புத்தக வடிவில் போடலாமே என்றார். கூடியாட்டம், ஒடிசி, பரதம் என கேள்விகளுடன் பதில்களும் இணைந்த புத்தகங்கள் மலர்ந்தது இப்படித்தான். இந்த புத்தகங்களை எங்கள் 'ஸ்கந்தா பப்ளிகேசன்' சார்பில் நாங்களே வெளியிட்டோம். இந்த கலைப்பணியில் அர்ப்பணிப்பு மட்டுமே மேலோங்கி இருந்ததால் அதிக சம்பளத்தில் பார்த்துக் கொண்டிருந்த நல்ல வேலையை கணவர் விடவேண்டி வந்தது. இந்த கலைப்பணியில் முதல் களப்பலி கணவரின் வேலை தான். ஆனால் அதை அவர் சந்தோஷமாய் செய்தார். இதற்குப் பிறகு நிச்சயம் புதிய இசை–நடன ரசிகர்கள் தெரிந்தவர்களாய் தேர்ந்தவர்களாய் அரங்கிற்குள் வருவார்கள். அந்த நம்பிக்கையை நம்மிடம் இருந்து போகும் கலை வடிவம் நிச்சயம் செய்து முடிக்கும் என்பார்."

"நல்ல மெலடி கேட்க விரும்புகிறவர்கள் பாட்டை கேட்கும் முன்பதாகவே அது எந்த ராகத்தில் அமைந்தது என்று தெரிந்தால் இன்னும் பாட்டை உள்வாங்கி ரசிப்பார்கள். நாட்பட நாட்பட இது இந்த ராகம் என்று அவர்களாகவே தெரிந்துகொண்டு பாட்டை இன்னும் ஆழமாக ரசிப்பார்கள்."

**பொதுவாக பரதநாட்டியம் பற்றிய புத்தகத்தில் எந்த மாதிரியான கேள்விகளை முன்னிலைப் படுத்தியிருக்கிறீர்கள்?**

"அடவு, வர்ணம் என்றால் என்ன? நடனத்துக்கென்று பாட்டு உண்டா? இப்படி எல்லாமே சிம்பிளான கேள்விகள். அதேநேரம் சிந்திக்க வைக்கிற கேள்விகள். இதற்கான பதில்களை எளிமைப் படுத்திக் கொடுத்தோம். கடந்த ஆண்டு இந்த புத்தகத்தை வெளியிட்ட பிறகு இதை வாங்கிப் படித்தவர்கள் 'பரத நாட்டியம் பற்றிய எங்கள் ஆர்வம் இப்போது அதிகமாகி இருக்கிறது' என்றார்கள். கர்நாடக இசை பற்றியும் 50 கேள்விகள் கொண்ட புத்தகம் வெளியிட்டோம். ஒடிசி, மோகினியாட்டம், கதகளி, குச்சிப்புடி, சாக்கியார் கூத்து என முதலில் வந்த புத்தகங்களைத் தொடர்ந்து 34–வது புத்தகமாகத்தான் பரத நாட்டிய புத்தகம் வெளியாகி இருக்கிறது.

குரு மரியாதை முக்கியம் என்பது பற்றியும் இந்த புத்தகத்தில் விவரித்திருக்கிறேன். ஒரு கலை மாணவி நடனத்திலோ பாட்டிலோ தேர்ந்தால் அதற்குப் பின்னணியில் அவர்களின் குரு பெயர் காலகாலத்திற்கும் நிலைத்திருக்கும். அதனால் குரு மரியாதையும் முக்கியம். குருவை மறவாதிருப்பதும் முக்கியம்."

**கூடியாட்டம் பற்றிய உங்கள் பார்வை?**

நாட்டிய சாஸ்திரத்தில் நாலு வித கூடியாட்டம் இடம் பெற்றிருக்கிறது. சமஸ்கிருதத்தில் பேச்சு வழக்கில் உள்ள டிராமாக்களை நடன வடிவத்தில் கொண்டு வந்து ஆடியிருக்கிறார்கள். இந்த கூடியாட்டத்தில் இருந்தே கதகளி வந்திருக்கிறது என்பது சிறப்புத் தகவல். நாட்டிய சாஸ்திரம் சொல்லும் நாலு வித அபிநயமும் கொண்ட கலை வடிவம் இது. கட்டியக்காரன் கதை சொல்வதாக தொடங்குவது சாக்கியார் கூத்து. பெண்கள் மட்டுமே பங்கேற்பது நங்கையார்கூத்து.

ஞானமுள்ள ரசிகன் கர்நாடக இசையை ரசிக்கப் போகிறான். தனக்கு ராகம் தெரியும், தாளம் தெரியும் என்பதை நிகழ்ச்சி தொடங்கியதுமே தனது அசைவுகளில் நிரூபிக்கவும் செய்கிறான். அப்படிப் பட்டவர்களுக்கு இசை அரங்கில் கிடைக்கிற அதே மரியாதை தான் எங்கள்பாமர ரசிகனையும் சென்று சேரவேண்டும். எங்கள் நாட்டிய இசைப்படைப்புகளின் ஒட்டு மொத்த நோக்கமும் அது தான்."

புன்னகை முகமாகவே முடிக்கிறார், வித்யா பவானி.

வித்யாபவானி–சுரேஷ் தம்பதிக்கு மஹிதா, ஹர்ஷிதா என 2 மகள்களும், நிபுண் என்ற மகனும். கலை வாரிசுகள். இவர்களில் ஹர்ஷிதா–நிபுண் இரட்டையர்கள்.

Scanned by CamScanner